நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பிறகு நல்ல முறையிலே இந்தத் துறை இயகுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன்

திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பயிற்சி அளித்து அதன் மூலமாக விபத்துக்களைத் தடுக்கலாம் என்று மேற்கொண்ட முயற்சி நமக்கு மிக மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழகத்திலே சில சாலைகள் மிகக் குறுகலாகவும், வளைவாகவும் மிகவும் பழுதுபட்டும் இருக்கின்றன. எந்த சாலைகளை அகலப்படுத்த வேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் பரிந்துரை செய்கிறார்களே, அந்த சாலைகளை முன் உரிமை கொடுத்து சரி செய்தாலேயே பெரிய விபத்துக் களைத் தடுப்பதற்குப் பெரும் வாய்ப்பாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன யோசனை நல்ல யோசனைதான். ஆனால் அந்த சாலைகளின் சில இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. சென்னையிலிருந்து செங்கல்பட்டுவரை செல்லும் சாலையை, ஈஸ்ட்கோஸ்ட் ரோடு என்ற வகையில் பொதுப்பணித் துறை வேலைகளை மேற்கொண்டாலும்கூட ஏதோ ஒரு காரணத்தை வைத்து தடை வாங்கி விடுகிறார்கள். அந்தத் தடையை அகற்றிவிட்டால் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சொல்லுகிற சாலையை சீர் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 70 திரு தே. ஜனார்தனன் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

70—

குறிஞ்சிப்பாடியில் தயாரிக்கப்படும் லுங்கிகள், பட்டுப் புடவைகளை கோ-ஆப் டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்தல்

*9870 திரு. தே. ஜனார்தனன் :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 பிப்ரவரி 12]

(அ) குறிஞ்சிப்பாடியில் தனியார்கள் லுங்கிகள் பட்டுப்புடவைகள் ஆகியவற்றை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து அதிக லாபம் ஈட்டுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்யுமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குறிஞ்சிப்பாடியில் தனியார் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. மாறாக தனியார் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் லுங்கிகள் துறையால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) கோ-ஆப்டெக்ஸ் மூலமாக தனியார் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகளைக் கொள்முதல் செய்ய இயலாது.

முற்பகல் 10-35.

திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் மூலமாக உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசிடம் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக உற்பத்தி செய்யப்படுகின்ற சேலைகள், பட்டுப் புடவைகள், லுங்கிகள் போன்றவைகள் மற்றும் இதர ரக துணிகள் தற்போது கோ-ஆப்டெக்ஸின் வாயிலாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. சிவசுப்பிரமணியன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீழ்ச்சியுற்ற இந்த தமிழ் சமுதாயத்தை அகில இந்திய அளவில் மட்டுமல்ல, அகில உலக அரங்கில் இறுமாந்து நிற்க வைக்க, செம்மாந்து நின்று செருக்கு நடை போட வைப்பேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டு தன் உயிரையே பணயம் வைத்து இன்று அன்னை தமிழாய் அழகுத்தமிழாய்' அணையா விளக்காய், வடலூர் வள்ளலார் ஏற்றி வைத்த அணையா ஜோதியாய் ஒளிவீசிக் கொண்டிருக்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் நல்லாட்சியில்தான்

குறிஞ்சிப்பாடியில் நெசவாளர்களுக்கு 28-1-1993-ல் 140 வீடுகளைக் கட்டி மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும் திறந்து வைத்தார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிஞ்சிப்பாடியில் 7, 8 இடங்களில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அதில் சிங்கமுனேரி டெக்ஸ் என்ற கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அதிலே கைலிகள்தான் நெய்யப்படுகின்றன. கொசுவலைகளும் நெய்யப்படுகின்றன. அந்தக் கைலிகளை ரிபேட்டில் அளிக்கின்றபோது ஒட்டு மொத்தமாகத் தனி நபர்கள் வாங்கிக் கொண்டு அதை வெளிநாட்டிற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தற்சமயம் அரசுக்கு இருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் தமிழக அரசே அதை ஏற்றுக் கொண்டு, அந்த லுங்கிகளைப் பெற்று வெளிநாடுகளுக்கு அந்நியச் செலவாணிக்கு உதவும் வகையில் ஏற்றுமதி செய்ய முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையின் போது புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனைக்கிணங்க ஏஜெண்ட்ஸ்கள் வாயிலாக பிற நாடுகளில் ஏஜென்சிகளுக்குத் தருவதாக உத்தேசிக்கப்பட்டு அதற்கான ஆக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கைத்தறித் துறையின் சார்பிலும், கோ-ஆப்டெக்ஸின் சார்பிலும் தற்போது ஏறத்தாழ 1 கோடி ரூபாய் கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். அதிகமாக ஏற்றுமதி செய்வதற்கு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். மிக விரைவில் குறிஞ்சிப்பாடி போன்ற பகுதிகளில் அதிகமாக உற்பத்தி செய்கின்ற அந்த லுங்கிகளை ஏற்றுமதி செய்வதற்குத் திட்டமிடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

71—

சென்னை மெரினா கடற்கரையிலிருந்து மகாபலிபுரத்திற்கு கடலோரமாக சாலை அமைக்கும் திட்டம்.

*10656—திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மெரினா கடற்கரையில் ஆரம்பித்து கடல் ஓரமாக மகாபலிபுரத்துக்குச் செல்லும் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?